## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை – 2016

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 17 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச்சட்டத்தின் 29.1 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டிடறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி**

இவ்வறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எழும் தாக்கங்களைத் தவிர, ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - அதிகாரசபை**

இவ்வறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி**

**2.2.1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் தற்போதைய தலைவர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளரொருவராக (சுயாதீனத்துவமற்ற - நிறைவேற்றுதரமற்ற) செயற்படுவதுடன், அந்த வங்கியின் மொத்த பங்கு மூலதனத்தில் 49 சதவீதம் தேசிய விடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரியதாயினும், தொடர்புடைய கம்பனியொன்றாக கருதி ஒருங்கிணைந்த கணக்குகளை தயாரிப்பதற்கும் தொடர்புடைய தரப்பினர் தொடர்பில் கணக்குகளில் தேவையான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட ஓஷன்வியூ டிவெலப்மன்ட் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்திருந்ததுடன், துணைக் கம்பனியின் நிகர சொத்துக்களின் அளவு அதிகாரசபையின் நிகர சொத்துக்களின் ஏறக்குறைய 14 சதவீதமாகவும் இருந்தது.

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - அதிகாரசபை

### 2.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு கொள்கை இலக்கம் 7.4 இற்கமைய மாளிகாவத்த சீஜீஆர் செயற்திட்டத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 58.12 மில்லியன் பணத்தை செலுத்த வேண்டிய காணி நட்டஈடுகளிலிருந்து எதிரீடு செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட ரூபா 332,025 தொகையான அருவச் சொத்துக்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 23,700 நட்டக்கழிவிடப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03

அதிகாரசபையின் சொத்துக்களில் 12 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் நியாயப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கும் வகையில் கணக்கீட்டு கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

கைமாற்றப்படாத கொடுக்கல் வாங்கலொன்றின் கீழ் 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் சுவீகரிக்கப்பட்டிருந்த ஹந்தான விடுமுறை விடுதிக்குரிய 170.56 பேர்ச் பரப்பளவான காணியின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 2,520 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், நியமத்தின் 47 ஆம் பந்திக்கமைய மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயப் பெறுமதிக்கு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2015 ஆம் ஆண்டின் போது கண்டி மாவட்ட அலுவலகக் கட்டிடத்திற்கு ரூபா 33.7 மில்லியன் செலவில் புதிய பாகங்கள் இணைக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், 2016 ஆம் ஆண்டின் போது கட்டிடங்களுக்கான பெறுமானத்தேய்விடும் போது, இந்த பகுதிக்கான பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டிராதமையால், கட்டிட பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 841,365 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது மத்திய வகுப்பிற்கபன வீடமைப்பு செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 144,300 பெறுமதியான அச்சுப் பிரதி இயந்திரத்தின் பெறுமதி மீளாய்வாண்டின் அதிகாரசபையின் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) உத்தேச வீடமைப்புத் திட்டங்களில் தொடர்ந்தும் எஞ்சியிருந்த காணித்துண்டுகள் மற்றும் உத்தேச வீடமைப்புத் திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்டிருந்த 450.3484 ஹெக்டேயர் பரப்பளவான காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிரந்திர அலுவலக மற்றும் வாடகை கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதிகாரசபைக்கு சொந்தமான 32 காணித்துண்டுகளின் பெறுமதிகளும் மீளாய்வாண்டின் இறுதியில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வீடுகளை நிர்மாணிப்பதற்காக கால்நடை வளங்கள் அமைச்சிடமிருந்து கிடைத்து எஞ்சியிருந்த ரூபா 13.32 மில்லியன் தொகை 2012 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டியதாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களில் ஏனைய உதவிகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வாடகை / குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 7.08 மில்லியன் பெறுமதியான 09 வீட்டு அலகுகளின் முதலீட்டுச் சொத்துக்களாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக, 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நடைமுறை சொத்துக்களின் கீழ் இருப்பாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) கணக்கீட்டுக்கொள்கை 7.4 இற்கமைய, ஏனைய நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நானாவித கடன்பட்டோர் ரூபா 72.42 மில்லியனுக்காக 20 சதவீதமான ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 71.06 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்பட்டோருக்காக மாத்திரம் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையின் காரணத்தால் ஐயக்கடன் ஏற்பாடு ரூபா 272,372 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய மீளாய்வாண்டிற்கான இலாபமும் மிகையாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் திரிபியச கடன் முறைமையின் கீழ் 06 வங்கிகளிடமிருந்து அதிகாரசபையால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீதி ரூபா 19.7 மில்லியனாக இருந்ததுடன், அந்த வங்கிகளால் வழங்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தல்களுக்கமைவான பெறுமதி மற்றும் பேரேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ஆகியவற்றிற்கிடையே ரூபா 7.81 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

1984 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 104.36 மில்லியன் மற்றும், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 52.52 மில்லியனுக்கு எதிரீடு செய்யப்பட்டு, ரூபா 51.84 மில்லியன் தொகையான பெற வேண்டிய மீதியொன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் இந்த அதிகாரசபையிலிருந்து ரூபா 39.89 மில்லியன் பெற வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கேகாலை மாவட்ட அலுவலகத்தினால் வீட்டுக்கடன் தவணை மற்றும் காணி விற்பனை கடன் தவணைப் பணத்தினை அறவிடுதல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாவட்ட அலுவலகத்தினால் தோட்ட வீட்டுக் கடனின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 5.64 மில்லியன் கடன் பணத்தில், ரூபா 3.69 மில்லியன் தொகைக்கான அறவீட்டிற்கான தாமத காலம் 05 வருடங்களை விஞ்சியிருந்தது.

(ii) 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் விற்பனை செய்யப்பட்ட காணி தொடர்பான அறிக்கையின் பிரகாரம், ரூபா 514,948 பெறுமதியான 03 காணித்துண்டுகளுக்குரிய எந்தவொரு தவணையும் அந்த காணியை விற்பனை செய்த திகதி முதல் அறவிடப்பட்டிராததுடன், தவணைகள் அறவிடப்பட்டவாறு காணப்படும் 43 காணித்துண்டுகளுக்குரிய நிலுவை தவணைகள் நிலவியபோதும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒரே தடவையில் பணத்தை அறவிடும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மாவட்ட அலுவலகத்தினால் விற்பனை செய்யப்பட்ட 04 காணித்துண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 770,875 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) கருணாரத்ன கிராம வீடமைப்பு திட்டத்தின் 56 ஆம் இலக்க காணித் துண்டிற்காக கோரப்பட்ட ஆகக்கூடிய விலை ரூபா 850,000 ஆக இருந்த போதிலும், நேர்முகப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளை பெற்ற ரூபா 725,000 பெறுமதியினை சமர்ப்பித்திருந்த நபரொருவருக்கு இந்த காணி 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த பணம் அதிகாரசபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(v) மாவட்ட அலுவலகத்திற்குரிய நிலுவை வாடகை அளவு ரூபா 1.06 மில்லியனாக இருந்ததுடன், அதனுள் 03 வருடங்களை விஞ்சிய நிலுவை வாடகையுடனான வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 106 ஆகும். அதிகாரசபைக்கு உரித்தற்ற காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வீடுகளில் வாடகை அறவீட்டிலான நிலுவையொன்று காணப்படுவதாக பொது முகாமையாளரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அதிகாரசபை செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைப் பணமான ரூபா 15.33 மில்லியன் மற்றும் அதற்குரிய தண்டப் பணமான ரூபா 7.12 மில்லியனுக்காக அதிகாரசபையினால் ரூபா 21.52 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இந்த பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம், களஞ்சிய முற்பணம், போக்குவரத்துச் செலவின முற்பணம் மற்றும் ஏனைய முற்பணங்களில் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்ட ரூபா 216.3 மில்லியன் தொகையினை தீர்ப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையின் ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை ஏனைய அரச நிறுவனங்களில் கடமையில் ஈடுபடுத்தியமைக்காக அதிகாரசபைக்கு ரூபா 72.42 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அவற்றுள் ரூபா 71.82 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

(உ) 1998 ஆம் ஆண்டின் போது 60 வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் செயற்திட்டத்திற்காக தனியார் சமூக நிறுவனமொன்றிற்கு அதிகாரசபையினால் எத்தாவல தோட்டத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த 685.49 பேர்ச் பரப்பளவான காணிக்காக தொடர்ந்தும் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 605,675 தொகை மற்றும் 06 காணித் துண்டுகளுக்காக, 2016 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 171,194 தொகையான தண்டப்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2010 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையினால் ரூபா 47.46 மில்லியன் தொகை கூட்டிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பணத்தை மீளப் பெற்றுத்தருவதாக திறைசேரியின் எழுத்து மூலமான சான்றுறுதியொன்று காணப்படவில்லை. எவ்வாறெனினும், இந்த பணம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பெற வேண்டிய மீதியொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) அரசு மற்றும் 05 தனியார் நிறுவனங்களிடமிருந்து செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்காக செலுத்த வேண்டிய நிலுவைக்கடன் தவணைப்பணம் ரூபா 512.42 மில்லியன் மற்றும் நிலுவையாகவிருந்த கடன் வட்டி ரூபா 248.07 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் கடற்றொழில் அமைச்சிற்கு செலுத்த வேண்டிய ரூபா 220.09 மில்லியன் கூட்டுத்தொகையான கடன் மீதியினை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நிர்வாகக் கம்பனியொன்றுக்கு காணியொன்றினை கொள்வனவு செய்வதற்காக 10 வருடங்களுக்கு முன்னர் அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்த ரூபா 520,369 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது நானாவிதக் கடன்பட்டோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகத்தினால் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் வீட்டுக்கடன் முறைமையின் (ரீசீசீஎஸ்) கீழ் 30 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த ரூபா 5.97 மில்லியன் பெறுமதியான 1,468 வீட்டுக்கடன் கோவைகள் தொலைந்து போனமையின் காரணத்தால் அந்த கடன் பணத்தை அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், கடன்பட்டோராக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதியான ரூபா 1,829.81 மில்லியன் தொகையினுள் 05 வருடங்களை விஞ்சியிருந்த கடன் கொடுத்தோர் மீதி ரூபா 1,315.62 மில்லியனாகும்.

(ஔ) களுத்துறை மாவட்ட அலுவலகத்தினால் 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வெளித்தரப்பினருக்கு ரூபா 275,000 தொகையான முற்பணம் வழங்கப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11(பீ) பிரிவு | ரூபா 2,218.36 மில்லியன் முதலீடு தொடர்பில் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்படவில்லை. |
| (ஆ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | பல்லேகல ரிஜன்சி பார்க் வீடமைப்பு திட்டத்திற்காக மற்றும் லிவின் ஹோம்ஸ் வீடமைப்பு திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சிறு கட்டுநிதிப் பணத்தில் ஒரே தடவையில் செலுத்தக்கூடிய ஆகக்கூடிய தொகை ரூபா 5,000 ஆன போதிலும், கேகாலை மாவட்ட அலுவலகத்தினால் 39 சந்தர்ப்பங்களில் ஆகக்குறைந்த எல்லையினை விஞ்சி முத்திரைகளைப் பெற்றுக்கொண்டமைக்காக ரூபா 376,088 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான தொகுதியினதும், அதிகாரசபையினதும் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான மிகை முறையே ரூபா 232 மில்லியன் மற்றும் ரூபா 240 மில்லியனாக இருந்ததுடன், அதனோடொத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை முறையே ரூபா 720 மில்லியன் மற்றும் ரூபா 1,028 மில்லியன் ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் முறையே ரூபா 952 மில்லியனால் மற்றும் ரூபா 1,268 மில்லியனால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் காணி விற்பனை வருமானம் ரூபா 872 மில்லியனாலும், ஏனைய வருமானம் ரூபா 1,377 மில்லியனாலும் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவிலான அதிகரிப்பிற்கு பிரதானமான காரணங்களாக அமைந்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2012 ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 303 மில்லியனாக இருந்ததுடன், 2015 ஆம் ஆண்டளவில் அந்த பற்றாக்குறை ரூபா 1,028 மில்லியன் வரையிலும் தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 240 மில்லியனான மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறெனினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை மீள சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 588 மில்லியன் தொகையாக காணப்பட்ட நிறுவனத்தின் பங்களிப்பானது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 1,976 மில்லியன் வரையிலும் அதிகரித்திருந்தது.

**3.2 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்**

காணி மற்றும் வீடுகளை சுவீகரித்தல், பணிக்கொடை செலுத்துதல் மற்றும் ஊழியர் முரண்பாடுகள் போன்ற விடயங்களின் அடிப்படையில் 72 வெளிவாரி தரப்பினரால் ரூபா 66 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டஈடு கோரி அதிகாரசபைக்கு எதிராக 72 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே, அத்துமீறி அதிகாரசபையின் ஆதனங்களில் வசித்து வருதல், நிலுவைக் கடன் மற்றும் நிலுவை வாடகையினை செலுத்தாமை போன்ற விடயங்களின் அடிப்படையில் 1,006 வெளித்தரப்பினருக்கு எதிராக அதிகாரசபையினாலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**(அ) பௌதீக செயலாற்றல்**

இலங்கையின் வீடமைப்பு அபிவிருத்தி, அதாவது, மாடி வீடுகள், வீடுகள் மற்றும் ஏனைய வாசஸ்தலங்கள் அல்லது கட்டிடங்கள் என்பவற்றை நிர்மாணிப்பதில் நேரடியாகப் பங்களிப்பு செய்தல், வீட்டுத் தட்டுப்பாட்டைக் குறைப்பதற்காக வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்குவதற்குத் திட்டமிடல், வீடுகளது அபிவிருத்திக்குக் காணிகளை வழங்குதல் போன்றவற்றிற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் மூலம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உருவாக்கப்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்திற்குப் புறம்பாக 26 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 03 நகர்ப்புற அலுவலகங்கள் என்பவற்றின் மூலம் தீவெங்கிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அதிகாரசபையின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) நகர காணிகளை மீள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மத்திய வகுப்பு வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முறையே 1,330 அலகுகள் மற்றும் 500 அலகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டின் இறதியில் உள்ளபடியாக அவற்றுள் எந்தவொரு வீட்டு அலகும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முன்மாதிரி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் (கிராமிய / தோட்ட / மீன்பிடி) கீழ் 4,500 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டின் இறதியளவில் 259 வீட்டு அலகுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ii) செவன திலிந்து வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 500 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 59 வீட்டு அலகுகள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதன் செயன்முன்னேற்றம் 12 சதவீதம் மாத்திரமாகும்.

(iii) நடைமுறையிலுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான மீள்நிர்மாண வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய, மீளாய்வாண்டினுள் 40 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், ஒரு வீட்டு அலகேனும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த அரச தனியார் பங்களிப்பு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழான 660 வீட்டு அலகுகளில் 59 மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதன் செயன்முன்னேற்றம் 9 சதவீதமாகும்.

(iv) வெலிஓய விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1,000 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 42 வீட்டு அலகுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதன் செயன்முன்னேற்றம் 4 சதவீதமாகும்.

(v) 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட காணி மதிப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் அதிகாரசபைக்குச் சொந்தமான 327.56 ஹெக்டேயர் பரப்பளவான வெற்றுக் காணிகளும், 116.1 ஹெக்டேயர்கள் பரப்பளவான அத்துமீறிக்குடியேறிய காணிகளும், 6.71 ஹெக்டேயர்கள் பரப்பளவான தொடர்புடைய காணிகளும் காணப்படுவதாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த காணிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிதிச் செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக வீடமைப்பு கடன் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த மொத்தக்கடன் மூலதனம் ரூபா 19,340.24 மில்லியனாக இருந்ததுடன், கடந்த வருடத்தின் இறுதியில் உள்ளபடியாக அந்த பெறுமதி ரூபா 16,307.33 மில்லியனாக இருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக வீடமைப்பு கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான கடன்பட்டோர் மீதியும் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த கடன்பட்டோர் மீதி ரூபா 4,509.19 மில்லியனாக இருந்ததுடன், அத்தொகையினுள் 5 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதி ரூபா 2,041.56 மில்லியன் அல்லது 45 சதவீதமாகும்.

(iii) கடன் சேகரித்தல் தரகுப் பணமாக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 86.33 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், கடன் அறவிடலின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், எதிர்பார்க்கப்பட்ட கடன் அறவீடுகளின் 58 சதவீதம் மாத்திரம் மீளாய்வாண்டினுள் அறவிடப்பட்டிருந்ததுடன், செயலிழந்து காணப்பட்ட கடன்பட்டோர் எண்ணிக்கை, மொத்த கடன்பட்டோர் எண்ணிக்கையில் 71 சதவீதமாகும்.

## 4.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 38(ஆ) பந்திக்கமைய, அதிகாரசபையினால் உரித்து கையேற்கப்பட்டிருந்த 154.85 ஹெக்டேயர்கள் பரப்பளவான 63 காணித்துண்டுகளை சுவீகரித்தமைக்காக செலுத்த வேண்டிய நட்டஈடாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 247.6 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபையினால் அந்த நட்டஈட்டினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து வீட்டுத் திட்டங்கள் அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிராமையின் காரணத்தால் அந்த வீடமைப்பு முன்மொழிவு முறைமைகளுக்கான அனுகூலச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த வீடமைப்பு முன்மொழிவு திட்டங்களுக்குரிய வீடுகள் வீட்டு உரிமையாளர்களுக்கு ஒப்படைத்தல் இடம்பெற்று, கூட்டுத்தாபனத்தை நிறுவ முடியாதிருந்தமையின் காரணத்தால் 17 வீடமைப்பு முன்மொழிவு திட்டங்களின் பராமரிப்பிற்காக ரூபா 7.38 மில்லியன் மற்றும், 29 வீடமைப்புத் திட்டங்களை புனரமைப்பதற்காக ரூபா 105.98 மில்லியன் தொகையினை செலவிடுவதற்கு அதிகாரசபைக்கு நேர்ந்திருந்தது.

(இ) குருணாகல் மாவட்டத்தின் 526 குடும்பங்களுக்காக சூரிய சக்தி கட்டமைப்பினை பெற்றுக்கொள்வதற்காக 1989 - 1994 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 4.08 மில்லியன் அறவிடப்பட வேண்டியதாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 2,590 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய கடன் தொகையினை அறவிடுவதற்கு திட்டவட்டமான வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2007 ஆம் ஆண்டின் போது கண்டி மாநகர சபைக்குச் சொந்தமான காணியொன்றில் அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 32 வீடுகளைக் கொண்ட மஹிய்யாவ வீடமைப்பு செயற்திட்டத்திற்காக ரூபா 20 மில்லியன் தொகையான நிர்மாணக் கிரயமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், அந்த பணத்தை மீளாய்வாண்டின் இறுதியில் வரையிலும் கண்டி மாநகர சபையிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆம் ஆண்டின் போது இரத்தினபுரி - கல்கடுவத்த எனும் பெயருடைய காணியை சுவீகரிப்பதற்காக அதிகாரசபையால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 8.69 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த சுவீகரிப்பினை மேற்கொள்ளாதிருக்க 2014 ஆம் ஆண்டின் போது அதிகாரசபை தீர்மானித்திருந்த போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்திய தொகையினை மீள அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அந்த தொகை அபிவிருத்தி சொத்தாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 37.87 மில்லியன் பெறுமதியான ஒதுக்கப்பட்ட வீடுகள், எஞ்சிய வீடுகள் மற்றும் கடைத்தொகுதி வீடுகளின் இருப்பில் காணப்படுவதுடன், ஒதுக்கப்பட்ட வீடுகளுக்காக கிடைக்க வேண்டிய நிலுவைப் பணத்தினை அறவிடுவதற்கும், இருப்பில் காணப்படும் எஞ்சிய வீடுகள் மற்றும் கடைத்தொகுதிகளை துரிதமாக விற்பனை செய்வதற்கும் அதிகாரசபையினால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) எல்விட்டிகல மாவத, 117 வத்த, IV ஆம் கட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 08 வீடுகளில் 04 வீடுகள் 2011 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், இதற்காக தொடர்ந்தும் பெற வேண்டிய ரூபா 4.97 மில்லியன் தொகையினை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா 1.94 மில்லியன் பெறுமதியான 13 வாகனங்கள் வடக்கு கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களில் தொலைந்து போயிருந்ததுடன், அது தொடர்பில் பரிசோதனையொன்றினை மேற்கொண்டு முறையான நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஐ) அதிகாரசபையால் அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட உபஹார கடன் உடன்படிக்கையின் பிரகாரம், அந்த கடன் தவணைகள் கடன் பெறுநரின் சம்பளத்திலிருந்து அல்லது பிணையாளரிடம் அறவிடுவதற்கு நிதியேற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அவ்வாறு அறவிடப்படாதிருந்த நிலுவைக்கடன் மீதியானது ரூபா 303.5 மில்லியனாகும். அரச வங்கிகளிடம் கடன் பெற்று இந்த உபஹார கடன் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன், கடன்பட்டோரிடமிருந்து காசு கிடைத்திருக்காத போதிலும், அதிகாரசபையால் உரிய திகதியில் உரிய தவணைப்பணம் மற்றும் வட்டி ஆகியவற்றை வங்கிக்கு செலுத்த நேர்ந்திருந்தது. இதன் காரணமாக அதிகாரசபையின் நாளாந்த நடவடிக்கைகளுக்கான பணமும் கடன் தவணை மற்றும் வட்டி செலுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கண்டி மாவட்ட அலுவலகத்தினால் கலஹா வீடமைப்பு திட்டத்தின் 16 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக 1998 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 2.67 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணம் அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் அதன் துணைக் கம்பனியில் ரூபா 120 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே துணைக்கம்பனியின் ரூபா 73.9 மில்லியன் மற்றும் ரூபா 207.67 மில்லியன் தொகையான வரிக்கு பின்னரான இலாபமொன்று கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் பின்னர் அதிகாரசபைக்கு எந்தவொரு இலாபப்பங்கும் கிடைத்திருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 செப்தம்பர் 11 ஆந் திகதிய 99/1165/21/122 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய அத்துமீறிக் குடியிருப்போரை சட்டரீதியாக குடியமர்த்துவதற்கு நிகழ்கால மதிப்பீட்டினை அடிப்படையாக கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகையில் அதிகாரசபையால் அவ்வப்போது பணிப்பாளர் சபையின் தீர்மானங்கள் மற்றும் உள்ளக சுற்றறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அதிகாரசபைக்குச் சொந்தமான வீடுகள், காணி மற்றும் கடை தொகுதிகளின் அத்துமீறிக் குடியிருப்போருக்கு அவர்கள் குடியேறிய வருடங்களின் மதிப்பீட்டு பெறுமதிக்கு கையளித்தல் இடம்பெறுகின்றதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. சில உதாரணங்கள் பின்வருமாறு

(i) 2015 ஆம் ஆண்டின் போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வன்னிகம வியாபார தொகுதிக்குரிய கட்டிடத்தின் உரித்தானது அத்துமீறிய குடியிருப்பாளருக்கு 1998 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு விலையான ரூபா 257,500 தொகைக்கு கையளித்தல் இடம்பெற்றிருந்தமை.

(ii) 2011 ஆம் ஆண்டின் போது கம்பஹா வேவல்தூவ உத்தேச வீடமைப்பு முறைமையின் 03 காணித்துண்டுகள் 2000 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 2.23 மில்லியன் தொகைக்கு (நிர்வாகக் கட்டணம் உள்ளடங்கலாக) கையளித்தல். இந்தக் காணிகளின் 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 6 மில்லியனாகும்.

(iii) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 13.8 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்ட மெனிங் டவுன் உத்தேச வீடமைப்பு திட்டத்தின் வீடொன்று 1996 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு விலையான ரூபா 3.7 மில்லியனுக்கு கையளித்தல்.

(ஆ) கொழும்பு டார்லி வீதியில் ரூபா 650 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய 01 ஏக்கர் 26.5 பேர்ச் பரப்பளவான காணியில் வீடுகளை அமைத்து அபிவிருத்தி செய்வதற்கு தனியார் கம்பனியொன்றுடன் 2006 யூன் 23 ஆந் திகதி ரூபா 812 மில்லியன் தொகையான கூட்டிணைந்த ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அதற்காக அந்த திகதியே ரூபா 100 மில்லியன் தொகை அதிகாரசபைக்கு கிடைத்திருந்தது. 10 வருடங்களைக் கடந்திருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டு வீடுகளை நிர்மாணித்தலோ அல்லது எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டிராமையால், உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு காணியை மீண்டும் அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, காணியின் தற்போதைய பெறுமதியினை கவனத்திற் கொள்ளாமல், 2006 ஆம் ஆண்டின் உடன்படிக்கைக்கமைய பெற வேண்டிய எஞ்சிய பணமான ரூபா 712 மில்லியன் மாத்திரம் அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டிடத்தின் தளம் மற்றும் I முதல் V வரையான தளங்களின் 27,184 சதுர அடியினை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு வாடகைக்கு வழங்கும் போது அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீடொன்றினைப் பெற்றுக் கொள்ளாமையால் போதியளவான வாடகை அறவிடப்படுவதாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. எனினும் அது தொடர்பில் கவனம் செலுத்தாது அதிகாரசபையினால் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியுடன் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டிருந்தது.

(i) அந்தக் கட்டிடத்தின் IX ஆம் தளத்தின் 7 ஆம் பகுதி அந்த வங்கிக்கு 2000 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு விடப்பட்டிருந்த போதிலும், அதற்காக வாடகை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிராததுடன், வங்கியினால் மாதாந்தம் ரூபா 21,850 படி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க மதிப்பீட்டாளரொருவரின் மதிப்பீடொன்றினைப் பெற்றுக்கொள்ளாமல் இந்த கட்டிடத்தின் IX ஆம் தளத்தின் 1,345 சதுர அடிகள் 2015 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் மதிப்பீட்டாளர் மற்றும் விலைக்குழுவினால் ரூபா 80,700 தொகையான வாடகை தீர்மானிக்கப்பட்டுள்ள போது, நிறுவன தலைவர்களின் ஒருங்கிணைப்பாட்டின் அடிப்படையில் ரூபா 54,500 தொகையான மாதாந்த வாடகையின் அடிப்படையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஈ) 1979 இன் 17 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச்சபை அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் ஒரே நபருக்கு மத்தேகொட மற்றும் மெனிங் டவுன் உத்தேச வீடமைப்பு முறைகளின் இரு வீடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 4.76 மில்லியன் பெறுமதியான இரு ஹோமாகம ஜல்தர வீடுகளை அப்புறப்படுத்தும் போது சாதாரண நடைமுறைக்குப் புறம்பாக உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடாமல் இரு நபர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை ஊழியர் நலன்புரி மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் ஆகியவற்றுக்கு பணம் செலுத்தும் போது கருத்திற் கொள்ள வேண்டிய சம்பளத்தினை விட குறைவான சம்பளத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 71.93 மில்லியன் தொகையான தண்டப்பணம் மற்றும் ரூபா 50.04 மில்லியன் தொகையான ஊழியரின் பங்களிப்புப் பணமும் அதிகாரசபைக்கு செலுத்த நேர்ந்திருந்ததுடன், அந்த பணத்தை ஊழியரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய காணிகளுக்கான நட்டஈட்டிற்காக ரூபா 64.68 மில்லியன் தொகையான தாமத வட்டியொன்றினை செலுத்த நேர்ந்திருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2012 ஏப்ரல் 04 ஆந் திகதியில் உள்ளபடியாக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணி 1,376 ஆக இருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணி 2,143 ஆனமையால், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விஞ்சி 807 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 28 சிரேஷ்ட நிறைவேற்று மற்றும் இடைநிலை மட்டத்திலான முகாமைத்துவ பதவிகளில் வெற்றிடங்கள் நிலவியதுடன், 2017 ஆம் ஆண்டின் போது அந்த பதவிகளின் 05 இற்காக மட்டும் ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றிருந்தன.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவிற்கு முரணாக 19 உத்தியோகத்தர்களுக்கு 06 மாதங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலமாக பதிற்கடமைப் பதவிகளில் மற்றும் கடமை மேவுகைக்காக தக்கவைக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) மாவட்ட அலுவலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தியமைக்கப்பட்டு மனிதவள தேவைப்பாட்டினை முறைப்படி இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், கேகாலை மற்றும் கண்டி மாவட்ட அலுவலகங்களின் முறையே 28 உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையொன்று மற்றும் 52 உத்தியோகத்தர்களின் மிகையொன்று அவதானிக்கப்பட்டது.

(உ) 2005 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய அதிகாரசபையின் தலைமை உள்ளக கணக்காய்வாளரொருவர் சேவையில் ஈடுபட்டுள்ள போதிலும், நிறுவனக் கட்டமைப்பினுள் அந்த பதவி உள்ளடக்கப்பட்டிராததுடன், 2012 ஏப்ரல் 04 ஆந் திகதிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய அந்த பதவி அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.7 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவுக்கு இணங்காத வகையில் அதிகாரசபையினால் 2016 ஆம் ஆண்டின் உலக குடியிருப்பு தினம் மற்றும் மத்திய வகுப்பு வீடமைப்பு செயற்திட்டத்தின் பணிகளுக்காக ரூபா 9.57 மில்லியன் தொகை வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன், அதிகாரசபையின் 05 வாகனங்கள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்திக்கமைய, அதிகாரசபையினால் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை, பாதீடு, வருடாந்த பெறுகைகள் திட்டம், கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் போன்றவற்றை உள்ளடக்கிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களுக்கமைய பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 53 முதல் 1,597 சதவீதம் வரையான முரண்பாடு அவதானிக்கப்பட்டதால் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.3 ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

அதிகாரசபையினால் 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் அவதானிப்புக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான லிபர்ட்டி பிளாஸா சுற்றுலா விடுதியை ஓஷன்வியூ டிவளப்மன்ட் கம்பனிக்கு விற்பனை செய்யும்போது அரச விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டு, அதிகாரசபையின் மதிப்பீட்டாளரின் மதிப்பீடு மாத்திரம் பெறப்பட்டிருந்தது. இச்சொத்து தொடர்பாகப் பின்னர் பெறப்பட்ட அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீடு ரூபா 11.52 மில்லியன் ஆன போதிலும், விற்பனைப் பெறுமதி ரூபா 9 மில்லியன் ஆகவிருந்தது. இது தொடர்பாக 2012 நவெம்பர் 23 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுவின் கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்காத வகையில் 2011 ஆம் ஆண்டின்போது பிரதி பொது முகாமையாளர் (மனிதவள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்) பதவியின் வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் சம்பள படியேற்றங்களை வழங்குதல் தொடர்பில் அமைச்சின் அறிக்கையொன்று வழங்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அதன் தற்போதைய நிலைமை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது அதிகாரசபையினது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கடன் கட்டுப்பாடு | (i) | கடன் கொள்கைக்கு இணங்காத வகையில் கடன்பெறுநர்களை தெரிவு செய்தல் மற்றும் தவணைகளை செலுத்துதல். |
| | (ii) | கடன் அறவீட்டினை கணனிமயப்படுத்தல் மற்றும் பற்றுச்சீட்டுக்களை வழங்குதல் முறைப்படி இடம்பெறாமை |
| | (iii) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் நீண்ட காலமாக தீர்க்கப்பட்டிராமை. |
| (ஆ) முற்பணக் கட்டுப்பாடு | | முற்பணங்களை வழங்குவதற்கான எல்லைகளை கடைபிடிக்காமை மற்றும் தீர்ப்பதிலான தாமதங்கள் நிலவுகின்றமை. |
| (இ) கணக்கீடு | (i) | பேரேடு மற்றும் நிதிக்கூற்றுக்களின் கணக்குகளின் பெயர்களில் வேறுபாடுகள் நிலவுகின்றமை மற்றும் ஒவ்வொரு விடயத்திற்கு வழங்கப்படும் உதவிகள் கணக்குகளை வேறாக இனங்காணாமை. |
| | (ii) | காணிகளுக்கான பேரேட்டுக் கணக்கொன்று பேணப்பட்டிராமை. |
| (ஈ) கொடுப்பனவு கட்டுப்பாடு | (i) | அங்கீகரிக்கப்படாத செலவின கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை. |
| | (ii) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் கணக்குகளின் குறியீட்டு இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிராமை. |